## ''வீரமாமுனிவரின்'' கித்தேரி அம்மாள் அம்மானையின் *ஆங்கில மொழிபெயர்ப்பு*

## நூல் வெளியீட்டு விழா

## 27 சூலை, 2022

இத்தாலி நாட்டு வித்தகத்தமிழர் **'வீரமாமுனிவரின்' கித்தேரி அம்மாள் அம்மானையின் *ஆங்கில மொழிபெயர்ப்பு* நூலானது அருட்பணியாளர் ஆனந்த் அமலதாஸ், சே.ச.** அவர்களால் இயற்றப்பட்டு **27 சூலை, 2022 இல் இலயோலா கல்லூரியின் இலாரன்ஸ் சுந்தரம் அரங்கில்** வெளியிடப்பட்டது. இலயோலா கல்லூரியின் தமிழ்த்துறையானது, இலயோலா வளாகத்தில் அமைந்துள்ள பல்சமய பண்பாட்டு உரையாடல் மையத்துடன் இணைந்து இந்நூல் வெளியீட்டு விழாவினைச் செவ்வனே நடத்தியது. இப்பெருமைமிகு நிகழ்வில் கலந்து கொண்ட பெருமக்களைப் பற்றிய குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

### நூலாசிரியர்

**அருள்முனைவர். ஆனந்த் அமலதாஸ், சே.ச.** ஒரு மெய்யியல் பேராசிரியர். சமஸ்கிருதத்தில் முனைவர் பட்டம் பெற்றிருப்பினும், இவரின் ஆய்வுக்களமோ தமிழ் இலக்கியமே. தமிழ், ஆங்கிலம், ஜெர்மன் ஆகிய மொழிகளில் புலமை பெற்றவர் - அப்பன்மொழிப்புலமையால் தாய்த்தமிழுக்குத் தொடர்ந்து தொண்டாற்றிக் கொண்டே இருப்பவர். ***அபிராமி அந்தாதி, கந்தர் அநுபூதி, சித்தர் பாடல் திரட்டு, திருமந்திரத்தில் நடனம் பற்றிய ஒன்பதாம் அதிகாரத்துப் பாடல்கள், நம்மாழ்வாரின் திருவாய் மொழியிலிருந்து நூறு பாடல்களை*** ஜெர்மனிலும், வீரமாமுனிவரின் ***அன்னை அழுங்கல் அந்தாதி, திருக்காவலூர்க் கலம்பகத்தை*** ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தவர். இன்று, கித்தேரி அம்மாளின் வரலாற்றையும் மொழி பெயர்த்து தமிழ்ப்புதையலைத் தரணிக்குத் தந்துள்ளார்.

### தலைமை தாங்கி நூலினை வெளியிட்டவர்

**முனைவர் கட்டளை கைலாசம்** நெல்லை மண்ணுக்குச் சொந்தக்காரர். திருநெல்வேலியின் ம.தி.தா.இந்துக்கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றியவர். ஆறு நூல்களை இயற்றியும், பத்து நூல்களைத் தொகுத்தும், தொண்ணூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட்டும் ஆய்வுலகில் தனித்ததோர் இடம் பிடித்தவர். 30 ஆண்டிற்கும் மேலாக, தென்தமிழகமெங்கும் சுற்றித் திரிந்து, கேட்பாரற்ற தமிழ் ஓலைச்சுவடிகளைத் தேடிச் சேர்த்தவர் - 360 ஆண்டு பழமையான பிள்ளையன் கட்டளை செப்பேட்டினைக் கண்டுபிடித்து வெளியிட்டவர். சமயம் தாண்டிய சன்மார்க்க நெறியில் பயணிக்கும் உண்மைத் தமிழர். ஆகவேதான், கிறித்தவ மறை சார்ந்த ஓலைச்சுவடிகளையும் தன் சொந்தச் செலவில் அன்பொழுகப் பேணி, அக்கறையாய் இன்றும் காத்து வருகிறார். அப்பெருமகனார் நூலினை வெளியிட்டு, தலைமையுரை வழங்கினார்.





**நூலின் முதற்படியினைப் பெற்று திறனாய்வுரை வழங்கியவர்**

**திருமிகு நிவேதிதா லூயிஸ்** - பிறர் அறியாதவற்றை அறிவிக்கும் ஆர்வம் மட்டுமே இவரின் ஒட்டுமொத்த அடையாளம். *முதல் பெண்கள், ஆதிச்சநல்லூர் முதல் கீழடி வரை, வடசென்னை, மகிழ்ச்சியின் தேசம், சிந்துவெளி நாகரிகம் வெளிவந்த கதை* எனத் தொடங்கி, அண்மையில் நம் தமிழக முதல்வரின் கரங்களையே அலங்கரித்த *அறியப்படாத கிறிஸ்தவம்* என இவை அனைத்துமே இவரின் படைப்புகள். வரலாற்று ஆய்வாளர், சமூக மற்றும் பெண்ணியச் சிந்தனையாளர், தமிழ்ப்பணிக்காகத் தன் அரசுப்பணியைத் துறந்தவர் எனப் பன்முகம் கொண்ட அருமைச் சகோதரி திருமிகு. நிவேதிதா லூயிஸ் அவர்கள் நூலின் முதற்படியைப் பெற்றும், நூலினைத் திறனாய்வு செய்தும் உரை நிகழ்த்தினார்.

**பாராட்டுரை வழங்கியோர்**

முதலாவதாக, **திருமிகு ரோடா அலெக்ஸ்.** இவர், தானாகவே நூல்களை வடிவமைக்கும் ஒரு தொடர்பியல் கலைஞர் (communication artist). நாம் வாழும் இவ்வாழ்க்கையைப் பற்றியும், இவ்வாழ்வில் நாம் கொள்ளுகிற நம்பிக்கைகள் பற்றியும் இளையோருடன் விவாதிப்பதும்; தமிழ்ப்பரப்பில் உள்ள கிறித்தவத்தின் வெளிப்பாடுகள் குறித்தும், இனக்குழுக்களுக்கு இடையே நிகழும் உரையாடல் குறித்தும்,





இணையாகத் தோன்றும் பண்பாட்டு, கலை சார்ந்த விழுமியங்கள் குறித்தும், மொழி, இலக்கியம், நிழற்படக்கலை குறித்துமான இந்த ரோடாவின் தேடல் நேற்றைக்கும் இன்றைக்குமானது மட்டுமல்ல - அது என்றைக்குமானது. இவ்வகைத் தேடலுக்கு மத்தியில், அம்மானையைப் பாராட்டிப் பேசினார் திருமிகு ரோடா அலெக்ஸ்.

'உண்மையை உரக்கப் பேசுவோம்' - இது, **திருமிகு இனியவள் ரஜினி** அவர்களின் டுவிட்டர் பக்கத்தில் இவருக்கான அடையாள வரிகள். சமயம், அரசியல், குடும்பம் எனும் தலைப்புகளுள் தன்னையே தொலைத்து, அவற்றுள் தொலைந்து போன மானுடத்தை மீட்டெடுக்கத் துணியும் துணிச்சலுக்குச் சொந்தக்காரரான இந்த இனியவள் ரஜினியும் அம்மானையையும் ஆசிரியரையும் பாராட்டிப் பேசினார்.

**திருமிகு மார்கரீத்தா திரேந்தோ** அவர்கள் கடந்த 2020 ஆம் ஆண்டில், சிகாகோ பல்கலைக்கழகத்தின் தெற்காசிய மொழிகள் மற்றும் கலாச்சாரங்கள் துறையில் *Writing Tamil Catholicism: A social history of persuasion and devotion in the eighteenth century* எனும் தலைப்பில் முனைவர் பட்டம் பெற்றவர். அதையே இவ்வாண்டு நூலாகவும் வெளிக் கொணர்ந்தவர். நவீன காலத் தென்னிந்தியாவின் தொடக்கக் கால கலாச்சார வரலாற்றை மையப்படுத்தி இவரின் ஆய்வுகள் இன்றும் தொடர்கின்றன. பாரிஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றும் இவரும், அம்மானையைப் பாராட்டிப் பேசினார்.

## வாழ்த்துரை வழங்கியவர்

**முனைவர் உலகநாயகி பழனி**க்குப் பேச்சே மூச்சு. மூன்று வயதில் முப்பது குறளையும், முந்நான்கு வயதில் முழுக்குறளையும் பற்றிப் பேசும் ஆற்றல் பெற்றதனால் சிறுமியாய் இருந்த போதே உலகத் திருக்குறள் பேரவையால் சிறப்பிக்கப்பட்டார். இதனால்தானோ என்னவோ, பிறப்பால் திலகவதியானவர், பின்னாளில் அறிஞர். மு.வ-வால் உலகநாயகி ஆகிப் போனார். பெயருக்கேற்றார் போன்று, 48 நாடுகளைக் கண்டவர்; 16 நாடுகளில் வள்ளுவருக்குச் சிலை அமைத்தவர்; தம் மாணாக்கர் பலரையும் தம்மைப் போல் பேச்சாளராக்கி உலகெங்கும் வலம் வரச் செய்தவர். இத்தகு பெருமைமிகு பேராசிரியர், ஸ்டெல்லா மாரிஸ் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர். உலகநாயகி பழனி அவர்கள் விழாவில் வாழ்த்துரை வழங்கினார். விழா நிகழ்வினை அருள் தந்தை. வி. சகாயராஜ், சே.ச., அவர்கள் இனிதே தொகுத்து வழங்கினார்